# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2355/30 - 2023 ඔක්තෝබර් මස 25 වැනි බදාදා - 2023.10.25

*2355/30 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 3/2021* (II)

**2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்**

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 52 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 71 ஆம் பிரிவின்கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**ரணில் விக்கிரமசிங்க,**
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.

கொழும்பு,
2023, ஒற்றோபர் 24.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்களை அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குதல் பற்றிய வழிகாட்டுநெறிகள் - தீர்வையற்ற தொழிற்பாடுகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.


1A - PG 6512 — 366 (2023/10)



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. (1) கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பிலும் அதிலிருந்தும் தீர்வையற்ற சில்லறைத் தொழிற்பாடுகளை அல்லது தீர்வையற்ற வணிக வளாகத் தொழிற்பாடுகளைக் கொண்டுநடாத்துவதற்கு உட்கருதுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், முறையே (3) ஆம் அல்லது (4) ஆம் உப ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்துதல் வேண்டும்.

(2) விடயத்துக்கேற்ப, (3) ஆம் அல்லது (4) ஆம் உப ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்தியதன் மேல், தீர்வையற்ற சில்லறைத் தொழிற்பாடுகளும் தீர்வையற்ற வணிக வளாகத் தொழிற்பாடுகளும் செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரம் - தீர்வையற்ற தொழிற்பாடுகள் ஒன்றாகப் பெயர் குறிக்கப்படலாம்.

(3) தீர்வையற்ற சில்லறைத் தொழிற்பாடுகள் என்ற வியாபாரத்தைக் கொண்டுநடாத்துவதற்கு உட்கருதுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் பின்வரும் தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(அ) குறைந்தபட்சம் ஐந்து மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களைக் கொண்ட முதலீட்டைச் செய்தல் ;

(ஆ) தீர்வையற்ற தொழிற்பாடுகளில் உலகளாவிய ரீதியிலான அனுபவத்தை அது உடையதென்றும் ஆடம்பர உயர்முனை வகைப்படுத்தப்பட்ட சில்லறைத் தயாரிப்புகளைக் கொண்ட அலுவல்துறை ஒன்றுக்கான அணுக்கத்தைக் கொண்டுள்ளதென்றும் ஆணைக்குழுவின் திருப்திக்கு எடுத்துக்காட்டுதல் ;

(இ) அனுமதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களைச் செல்லுபடியாக்குவதற்காகக் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பற்றிணையில்லா ஒருங்கிணைத்தலுடன் ஆணைக்குழுவின் பயணி உட்பிரவேசப் பதிவுச் செய்முறையைக் கடைப்பிடித்தல் ; அத்துடன்

(ஈ) கொழும்புத் துறைமுக நகர (தீர்வையற்ற தொழிற்பாடுகள்) விதிகளுக்கிணங்க இலங்கைச் சுங்கத்தின் தீர்வையற்ற சில்லறைத் தொழிற்பாட்டு இணங்கியொழுகுகைகளின் மேற்பார்வையையும் கண்காணிப்பையும் கடைப்பிடித்தல்.

(4) தீர்வையற்ற வணிக வளாகத் தொழிற்பாடுகள் என்ற வியாபாரத்தைக் கொண்டு நடாத்துவதற்கு உட்கருதுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் பின்வரும் தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) குறைந்தபட்சம் ஏழு மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களைக் கொண்ட முதலீட்டைச் செய்தல் ; அத்துடன்

(ஆ) அனுமதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களைச் செல்லுபடியாக்குவதற்காகக் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பற்றிணையில்லா ஒருங்கிணைத்தலுடன் ஆணைக்குழுவின் பயணி உட்பிரவேசப் பதிவுச் செய்முறையைக் கடைப்பிடித்தல்.

3. செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரம் - தீர்வையற்ற தொழிற்பாடுகள் ஒன்றாகப் பெயர்குறிக்கப்பட்டதன் மேல், தீர்வையற்ற சில்லறைத் தொழிற்பாடுகளும் தீர்வையற்ற வணிக வளாகத் தொழிற்பாடுகளும், சட்டத்தின் 53 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி கட்டளையொன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து இருபதாண்டு காலப்பகுதியொன்றுக்காக, சட்டத்துக்கான அட்டவணை II இல் தரப்பட்டுள்ள சட்டவாக்கங்களிலிருந்தான விலக்களிப்புகளுக்கு அல்லது அவற்றின் கீழான ஊக்குவிப்புகளுக்கு, உரித்துடையனவாதல் வேண்டும்.

4. தீர்வையற்ற சில்லறைத் தொழிற்பாடுகள் அல்லது தீர்வையற்ற வணிக வளாகத் தொழிற்பாடுகள் என்ற வியாபாரத்தைக் கொண்டு நடாத்துவதற்கு உட்கருதுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், 3 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புகளுக்கு அல்லது ஊக்குவிப்புகளுக்கு உரித்துடையவராக வருகின்ற நோக்கத்துக்காக இவ்வொழுங்கு விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றினுள் இவ்வொழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்துதல் வேண்டும்.

5. இவ்வொழுங்குவிதிகளில் -

"சட்டம்" என்பது, 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் என்று பொருளாகும் ;

“அதிகாரமளிக்கப்பட்ட ஆள்” என்பது, சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

“கொழும்புத் துறைமுக நகர (தீர்வையற்ற தொழிற்பாடுகள்) விதிகள்” என்பது, 2023 ஆம் ஆண்டு மே 22 ஆந் திகதிய 2333/ 14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர (தீர்வையற்ற தொழிற்பாடுகள்) விதிகள் என்று பொருளாகும் ;

“ஆணைக்குழு” என்பது, சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு என்று பொருளாகும் ;

“தீர்வையற்ற வணிக வளாகத் தொழிற்பாடுகள்” என்பது, கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பினுள் பல தீர்வையற்ற சில்லறைத் தொழிற்படுத்துநர்களையும் மற்றும் அத்தகைய தீர்வையற்ற வணிக வளாகங்களின் உட்கட்டமைப்பையும் கொண்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தீர்வையற்ற வணிக வளாகங்களை அபிவிருத்தி செய்து முகாமை செய்கின்ற அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின் தொழிற்பாடுகள் எனப் பொருளாகும் ;

“தீர்வையற்ற தொழிற்பாடுகள்” என்பது, தீர்வையற்ற சில்லறைத் தொழிற்பாடுகளும் தீர்வையற்ற வணிக வளாகத் தொழிற்பாடுகளும் என்று பொருளாகும் ; அத்துடன்

“தீர்வையற்ற சில்லறைத் தொழிற்பாடுகள்” என்பது, கொழும்புத் துறைமுக நகர (தீர்வையற்ற தொழிற்பாடுகள்) விதிகளில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கிணங்கத் தீர்வையற்ற சில்லறைத் தொழிற்பாடுகளை நடாத்துகின்ற அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின் தொழிற்பாடுகள் என்று பொருளாகும்.

EOG *10 - 0259*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.